உ

குருபாதம்

தெய்வசிகாமணி

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி.

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரை திருவண்ணாமலை ஆதீனம்


ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் வரலாறும்

நான்மணிமாலையும்

44-வது மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி ஆறுமுக தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளத்தின்படி
வெளியிடப் பெற்றது.

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி
1950





திருவண்ணாமலை ஆதீன ஸ்தாபகர்
ஸ்ரீலஸ்ரீ
தெய்வசிகாமணி தேசிக மூர்த்திகள்

உ

சிவமயம்

குருபாதம்

பதிப்புரை

எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்கும் ஆண்டவன், தென்னாட்டில் சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்பொருளாக இருந்து அருள் புரிகின்றான். அப் பெருமானது திருவருளை உயிர்கள் எளிதிலே பெற்று, உய்தியடைய வேண்டுவது இன்றியமையாத வொன்றாகும். அதற்குரிய சாதனங்களாகத் தென்னாட்டிலே தோன்றிய சைவ ஆதீனங்கள் பதினெட்டு. இவ்வாதீனங்களை அருட்பெருஞ் செல்வர்களாகிய ஞானாசிரியர்கள் தோற்றுவித்து, மக்களின் பக்குவங் கண்டு அருளுபதேசங்களை ஆற்றி வந்தார்கள்.

ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே, நினைக்க முத்திதரும் திருவண்ணாமலையில் சிவஞானச் செல்வராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக மூர்த்திகளால் திருவண்ணாமலை ஆதீனம் நிறுவப்பெற்று, வழிவழியாகச் சிறந்த குருமூர்த்திகளால் ஞானவரசு புரியப் பெற்று வருகிறது.

இவ்வாதீனத்துச்சிட பரம்பரையில்வந்த தம்பிரான்களும் ஒப்பற்ற சிவஞானச் செல்வர்களாகவும், கலைக் களஞ்சியங்களாகவும் திகழ்ந்திருந்தன ரென்று தெரிகிறது.

சித்தாந்த சைவச் செந்நெறியைப் பேணி வளர்த்து வரும் பெருமை, இவ்வாதீனத்திற்குப் பல ஆண்டு

களுக்கு முன்னிருந்தே வருவதென்பது, இவ்வாதீன வரலாற்றை அறியும் பொழுது நன்கு தெரிகின்றது.

இவ்வாண்டு ஆவணிப் பூரட்டாதி ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி தேசிக மூர்த்திகள் குருபூசைத் திருநாளாகிய இன்று, அப்பெருந்தகையாரது வரலாற்றையும், அவர்கள்பேரில் ஆதீன முனிபுங்கவரில் ஒருவராகிய குமரசாமி முனிவர் இயற்றிய நான்மணிமாலையையும் அச்சிட்டு வெளியிடத் திருவுளங் கொண்ட 44-வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி ஆறுமுக தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

ஆதீன முதற் குரவரது திருப்பெயர், நான் மணி மாலையில் "தேவசிகாமணி, தெய்வசிகாமணி' என இரண்டு விதமாக வழங்கப் பெற்றுள்ளது. இந் நூலில் சைவ சித்தாந்த நுண் கருத்துக்கள் செறிந்து விளங்குவதை அறிஞர்கள் உணர்ந்து மகிழுவார்களாக.

இதனை அச்சிட்டு வெளியிடத் திருவருள் புரிந்த ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி தேசிக மூர்த்திகளுக்கும், ஆணை தந்த ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி ஆறுமுக தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கும், சின்னப்பட்டம் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கும் எனது மனமொழி மெய்களாலாகிய வணக்கத்தைச் செலுத்திக் கொள்ளுகின்றேன்

குன்றக்குடி
29—8—50 } **"பர்லகவி" இராமநாதன் செட்டியார்**

குருபாதம்

தெய்வசிகாமணி.

தெய்வ மணங்கமழும் தமிழகத்திலே சிவஞானச் செல்வத்தை வழங்கும் நிலையங்களாகப் பிறவிப்பிணியின் மருத்துவ நிலையங்களாக ஆதீனங்கள் பல விளங்குகின்றன. பதினேழாம் நூற்றாண்டில் சைவத்திற்குப் பேரரண் செய்தன, சமயாசாரிய சந்தானசாரிய பரம்பரையில் வந்த பதினெட்டு மடங்கள். சந்தானசாரிய பரம்பரையில் வந்தவை, திருவண்ணாமலை, தருமபுரம், திருவாவடுதுறைபோன்ற ஆதீனங்கள். அவற்றுள். திருவண்ணாமலையாதீனம் சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றி அருள்ஞானச்சுடர் கொண்டு ஆன்மாக்களின் அகவிருளை நீக்கி, பாச பந்தங்களைப் போக்கி, என்றும் முற்றாத வற்றாத பேரின்பப் பெரு வாழ்வை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டுத் தலங்களிலே மிகச்சிறந்தது திருவண்ணாமலை. இது: பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றாகவும், ஆறாதாரங்களிலொன்றாகவும் அமைந்து அடியவர்களின் வினை, தளைகளை ஒழித்து அனுக்கிரகிக்கும் அருளுருவமலை. அண்ணாமலை: உயர்ந்த மலை. நினைக்க முத்திதரும் தலமென்பதை "எல்லையில் அருணையை நினைக்க எய்தலாம் முத்தி" என்னும் மொழி விளக்கிக் காட்டுகின்றது. இத்த

கைய பெரும் பதியில் சிவாநந்தக் கடலை முகந்து உயிர்களுக்குக் கொடுக்கும் முகிலென ஆதி சைவ மரபிலே திருவண்ணாமலை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக குருமூர்த்திகள் அவதரித்தார்கள். அடிகள் நான் மறைக்கிழவராக, நற்றவ முதல்வராக, தொகைத் தமிழக் கவிஞராக, சித்த மல மறுவித்துச் சிவமாக்கும் சிவஞானச்செம்மலாக, அன்பின் திறத்தை அளந்து அருள் செய்யும் காளத்தி நாதனின் திருவருளில் திளைத்த தவச் செல்வராக, திகழ்ந்தார்கள். வடவேங்கடம் முதல் இலங்கை வரையில் அடிகளின் திருவருட் பெருக்கு பரவியிருந்தது. அடிகள் ஆன்மாக்களுக்கு அடிசேர் ஞானமருளியதோடு, பல பொருட் பெருஞ் செயல்களையும் செய்து நலங்கொடுத்தார்கள். சோழ மன்னன் ஒருவன் திருவண்ணாமலைக்கு வந்தபொழுது அவனது குதிரை மூர்ச்சையாகி விட, அரசன் பரியை இழந்த துன்பத்தை நீக்கியருளுமாறு, நமது அடிகளை வேண்டிக்கொள்ள, அடிகள் பரியை உயிர்ப்பித்துத் தந்தார்கள் இந்நிகழ்ச்சியை விளக்கும் சிற்பங்கள் இன்றும் திருவண்ணாமலை அருணசலேசுவரர் ஆலயத்தின் வடக்குப் பிரகாரத்து மதிற் சுவரில் இருக்கின்றன. அடிகள் திருவண்ணாமலையின் எல்லைப்புறத்தில் சிவயோக சமாதி நிலையிலமர்ந்து "ஞான வாரமுதபானமதருந்திக், கருவிகள் கழன்று பரவசமாகிப், பரமானந்தப் பரவையுட் படிந்து பேராவியற்கை பெற்றினிதிருப்ப, ஆரா இன்பமளித்தருள் அண்ணா 'லாகத்திருக் கோயில் கொண்டெழுந்தருளி யுள்ளார்கள். நம்மிடையே

பத்திப் பெருஞ் செல்வராக வாழ்ந்திருந்த ரமண மகரிஷிகள் தெய்வசிகாமணியின் திருவருள் நோக்கத்தால் தான் தவச் செல்வரானார்கள் என்று அறிகின்றோம். அடிகளுடைய "அருட்பெருக்கு வற்றாதது" என்பதைக் காட்டுவது போல, குருமூர்த்த ஆலயத்துக் கிணறு எந்தக் காலத்திலும் (ஊரிலுள்ள எல்லாக கிணறுகளும் நீரில்லாமல் வறண்ட காலத்திலும்) வற்றாது ஊறிக் கொண்டிருக்கிறது. ஸ்ரீசிவஞானச் செல்வரைத் தொடர்ந்து பின்னே, தாண்டவராய தேசிகர் முதலிய 43 மகா சந்நிதானங்கள் திருவண்ணாமலை ஆதீனத்தைப் பரிபாலித்து வந்தார்கள். இப் பரம்பரையிலே 17-வது மகா சந்நிதானமாக விளங்கிய நாகலிங்க தேசிகர் என்பவர்கள் இராமேசுவரத்தைத் தெரிசிப்பதற்காக எழுந்தருளிய காலத்தில் இராமநாதபுரத்திலிருந்த சேதுபதியரசர் அடிகளின்பால், அகங்குழைந்த அன்பும் பத்தியுங்கொண்டு உபசரித்துத் தம் நாட்டிலேயே இருந்து, அருள் வழங்கியருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு, சமஸ்தானத்துக்குச் சொந்தமான, திருக் கொடுங்குன்றம் (பிரான்மலை.) சதுர்வேதமங்கலம், குன்றக்குடி, திருப்புத்தூர் திருக்கோளக்குடி, தேனாக்ஷி அம்மன்கோவில் முதலிய ஐந்து பெருங் கோயில்களையும் அவற்றினுக்குரிய பெரும் பொருள்களையும் அளித்தார். இஃதன்றி ஆதீன மடாலயத்துக்கென்று தனியே, பெரும் பொருள் வழங்கினார். அடிகள், சேதுபதியின் வேண்டுகோளுக்கிணங்கித் தென்பாண்டி நாட்டைத் திருவருளில் தோய்த்து இன்புறுத்தற்காக, அழகே

கோலமாக, கருணையே வடிவமாக வான் பழித்திம் மண் புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளல் ஆறுமுகங்களோடு அமர்ந்து அருள் வழங்கும் குன்றக்குடியிலிருந்து ஞானவரசுசெய்து வந்தார்கள். அவர்களின் பிற்றோன்றல்களாக எழுந்தருளிய மகா சந்நிதானங்கள் குன்றக்குடியிலேயே இருந்து அருளாட்சி செய்து வந்தனர். அப் பரம்பரையில் இன்று 44—வது மகாசந்நிதானமாக எழுந்தருளி அருளரசும் சைவ பரிபாலனமும் செய்து வருகின்ற குரு மூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி ஆறுமுக தேசிக பரமாசாரிய சுவாமிகளாவார்கள். இவர்களது அருளாட்சியில் ஆதீனம் தேவஸ்தானங்களின் செல்வநிலை உயர்ந்துள்ளது. மகா சந்நிதானம் அவர்களின் அருளரசு வாழ்க: திருவடிகள் வாழ்க

தெய்வசிகாமணி தேசிகர் திருவடி வாழ்க.

* * *

முன்ன மயனுந் திருமாலு முயன்று தேடிக் காணுத
வன்ன முடித்தாட் பெருமானை மனத்திற் பதித்து
[மாந்தரெலாந்
துன்னு மிருமைப் போகநலந் துய்க்கக் குருவாய்த்
[தோன்றியொளி
மன்னு மருணைத் தெய்வசிகா மணித்தே சிகன்றாண்
[மலர்போற்றி

— பாலகவி

கணபதி துணை.

குமாரசாமி முனிவரியற்றிய

தெய்வசிகாமணி தேசிகர்

நான்மணிமாலை.

காப்பு.

தேன்மணி மாலையொடுந் தேவ சிகாமணிமே
னுன்மணி மாலை நயந்தணிய – மேன்மணிக்கேழ்
வட்கருணைக் கோன்மிடற்றில் வான்றமிழோ
கட்கருணைக் கும்பமுனி காப்பு. [டன்றசிறு

வெண்பா.

பூமலிசெங் காவி பூத்ததடம் போலருணைத்
தேமலி தேவ சிகாமணியே - யேமச்
சகிதாதி கும்பகாந் தத்தேஎற் சத்திச்
சகிதாதி போகந் தரும். (1)

கலித்துறை.

தருமாதி மூன்று சமுத்திர நீந்தித் தடைபுரிந்த
கருமாதி மூன்று மலநீங்கி முக்குணக் காடகன்றே
யருமாதி மாயை யடைத்த கபாட * மகன்றுறலாந்
திருமா தியலரு ணாசலத் தேவ சிகாமணியே. (2)

அகவல்.

மணியினங் குயின்றென வணிமலர் பொதுளிய
பத்திரப் பைம்பொழிற் சித்திரப் படாஞ்சூ

---

* அகன்று என்பது செயவெனச்சத்திரிபு.

பூன்வம் பொலிந்த நன்னெடுஞ் சிகரக்
கன்னசா லைகளுங் கன்னகூ டமுமா
யருவித் தொங்கன் மருவித் தூங்க
மாமுடித் திப மணிக்குடங் தாங்கித்
திபத் தான்முகில் செவ்வா னுகித்
தங்கத் தகட்டிற் பொங்கொளி பரப்பத்
தடந்திகழ் கொடிஞ்சி நெடுந்தேர் போலுந்
திருவரு ளாசலக் குருவரு ளாசலச்
சைவசி காமணி தெய்வசி காமணி
யமேய மிச்சய மநௌபம மனுமயஞ்
சூக்குமஞ் சருவக நித்தியங் துருவ
மவ்யய மீச மதிந்தியஞ் சூன்ய
நிர்க்குண மென்று நிகழ்கா ரணப்பெய
ரந்தமி லாமையா லமேய மாகியு
மமரிட மின்மையி னநிச்சய மாயு
மதுல மாதலி னநௌபம மாயு
மமல மாதலி னனுமய மாயுஞ்
சூழு லின்மையிற் சூக்கும மாயுந்
தான்வியா பகத்தாற் சருவக மாயு
நிட்கா ரணத்தா னித்திய மாயுஞ்
சேராசை யின்மையிற் றுருவ மாயு
மறிபூ ரணத்தா லவ்யய மாயு
மிறைமை யெய்தலி னீச மென்று
மரும்பசி தாக மளந்தறி வதுபோ
லறிவரி தாகு மதிந்திய மாயுஞ்
சேர்சட மல்லது சித்துரு வாதலிற்
சொர்வி லாத சூனிய மாயும்
விங்குசாத் துவிக விந்து வைந்தவ

நீங்கநின் றமையா னிர்க்குண மென்றுஞ்
சத்தா மாத்திர மாந்தனிப் பொருளைக்
* காரக மென்னும் பாரமத் திட்டு
நெய்போன் முத்தியி னெய்தநீ செய்த
நன்றிக் கெதிர்செய் யேனிச் சித்தே. (3)

விருத்தம்.

சித்துரு வருணைத் தேவ சிகாமணிச் சித்து வாரி
நத்துரு வலஞ்சூ ழுந்த நத்தினு ளுதித்த நல்ல
முத்துரு முத்தர் வேண்டின் முத்திநன் குதவும் போது
சத்துரு வாரும் பாசந் தனக்குமா தவர்க்குந் தானே (4)

வெண்பா.

தானே தனக்கிணையாய்த் தாவிலரு ணாசலமாய்
ஞானமய மாகியே நன்றாகி - வானோருஞ்
சேவிக்குந் தேவ சிகாமணியை யேதரித்தா
லாவிக் கலங்கார மாம். (5)

கலித்துறை.

ஆமாம்புன் மாயை யடைத்துநன் மாயை யதனுளொரு
பூமா நிலமென்று போட்டுர மாக்கிப் புரந்தனுவை
மாமா விதையென வைத்ததெல் லாம்வள மாமருணைப்
பாமாலைத் தேவ சிகாமணிச் சோதி பயிர்செய்யவே. (6)

அகவல்.

செய்யசிந் தூரச் செழுநதிக் கிடந்தவ
கோர்பதி னாறுநான் குகத்தினும் விளைந்த
வுதயா சலமணி சிதையமேல் விளங்குந்
திருவரு ணச்சலத் தேவசி காமணி
யருணா சலேசமி லருணா சலேசன்
குருபரன் பால குமாரன் விருத்தனென்

---

* காரகம் = தீக்ஷா நுக்கிரகம்

றொருவ னெய்து பருவம் போலப்
பொருந்து மிலய போகா திகாரமென்
றிருந்தியல் செய்தி யியம்பலோ வரிதே
யிருபரு வந்தன் னிடத்துநீங் காத
வொருபரு வத்தி னுதாசி னரூபி
தானொரு பொருளைத் தான்விரும் பாமை
லான்மா விளங்கு மரும்பய னோக்கி
யானசு பாவத் தனைவரு முறங்கினுந்
தானுறங் காத தனிக்குடி வாழ்க்கையில்
ஞான மாத்திர மான போதும்
ஆக்கிய மாயா சத்தி வியத்தி
யோக்கியப் பார்வை யுயர்படைப் பாகவுஞ்
சேர்தரு மாயே யந்திதி யோக்கியப்
பார்வை தானே பகர்திதி யாகவுங்
கன்ம பரிபா கம்படச் செய்த
லன்மையி லாச்சங் கார மாகவுந்
திகழ்மலஞ் செலுத்த றிரோத மாகவுங்
கௌர்கா ரகமனுக் கிரக மாகவு
நினைவா லைந்தொழி னிகழ்த்துந் திதியிற்
றேசிகர் யோசனை செய்யினுஞ் சிவத்துவ
மேசி லாதுறு மிலயத் தானத்
திலயா வத்தையி னிலங்கிய சோதியை
மலைவற வுரைப்பின் வானினும் பெரிதே
யின்மையின் மனேலைய மெய்துவர்
சின்மயத் தோர்தினஞ் சிந்தனை செய்தே. (7)

விருத்தம்

செய்ய சிரரு ணாசலத் தேவசி காமணிச் செழுஞ்
சோதி,யைய னேசெயு மைந்தொழி லையும்வினை யாட்

டென்பரறியாதார், கைய தாகிய காரணங் கரண
மோர் காரியம் பயனல்லாற், பையல் செய்தொழில்
பரமகா ரணர் செயார் பகர்வது பரிவன்றே. (8)

வெண்பா.

அன்றன்று முந்நாற் றறுபத்து முச்சமயத்
தொன்றன்று வெவ்வே றுளமுத்தி—நன்றென்ற
சித்தாந்த மாமருணைத் தேவ சிகாமணிசெய்
சுத்தாத்து வைதச் சுகம். (9)

கலித்துறை.

சுகமெறிந் தேகுற மாதரு மாதவத் தோர்களுங்கண்
ணகமுறுந் தேவ சிகாமணி யாலங் கவணடுத்தே
தகவுறைந் தைவனங் காத்தரு ஞாசலச் சாரலிலே
யிகமுறு போகமு மின்பர போகமு மெய்துவரே. (10)

அகவல்

எய்தருங் காலாக் கினியெழுந் தடர்ந்த
செஞ்சுடர்ச் சுவாலை விஞ்சுகா லத்து
நரக முதலா நலம்பெறு சுவர்க்கத்
தளவுஞ் சராசர மடங்கலுந் தகிக்கும்
பிரதமப் பிரளயம் வரவருந் தோறும்
பிரமா படைப்பப் பிரமகற் பத்திற்
பிரமாண் டத்திலிவ் விருநிலப் பரப்பே
சத்துவ மாகத் தான்முன் பொருந்தலி
னன்னிலை பிளந்த பொன்னிற வண்டத்
திருகபா லங்களும் பரமாணு வாகப்
பிரமாண் டாதி பிராகிரு தாந்தத்
திருநான் கண்டமும் வருமுறை பெயர்ந்து
காரியந் தத்தங் காரணத் தொடுங்க

வியத்தசி கண்ட வுருத்திர ரருளால்
மத்திமப் பிரளய வகையிலிம் முறையே
யேழி லக்கத் திருபதி னாயிரம்
பிரம ரிறந்திட வருமா லையிலே
முறைபெறு மூர்த்தா மூர்த்த மாகியு
மறையாத் தந்திர மந்திர மாயும்
பரமும் பரம பரங்க ளாகியு
மேற்படு சுத்த மிச்சிர மசுத்தமென்
றோர்ப்பு றுர தத்துவ மாறு றுயுங்
காலாக் கினிமுதற் கருதுசி வாந்தம்
பேரா தடுக்கிய பிரக்கிரி யாண்டத்
திருவகை மாயே யங்களு மிடிந்து
காரியந் தத்தங் காரணத் தொடுங்க
வடுமகாப் பிரளய மாரணி முடிப்பச்
சுத்த காலந் தோன்றிய சமயத்
திலயப் பருவத் திதம்பெறு பதார்த்தப்
பாலனப் போகர் சில நோக்கி
லியல்சேர் நியாமிக விச்சா சத்தியு
ஞாபக மான ஞான சத்தியு
முத்தி யோகத் துயர்ந்த கிரியையு
மென்று மூவகைச் சின்னம் படைத்து
நால்வகைப் பேருடை மேல்வகை யொருவ
னண்ணு மலையிற் கண்ணு ரமுதத்
தேவசி காமணித் தேசிகன்.
மேவிய செய்கை விளையாட் டலவே. (11)

விருத்தம்

வேதாகம ஞானவி பூதிம றைநீதம றோத மாதிநி
மேதாதிக லாதிசு கோதய மேலான

நாதாதிய னாதிப ராபர ஞானாதிய னமய பூரண
நானாவித மானச தாசிவ நீள்சோதி
யாதாரமெ னாவரி தேடிய பாதாளமெலாமடி யாய்நெடி
தாகாயமெ லாமுடி யாயய னோரவே;ர்
சிதாடவி சேரரு ணாசல மீதேயுறை தேவசி காமணி
சீர்பாதம்வி டாதவ ரேகதி சேர்வாரே. (12)

வெண்பா.

சேரியலி னிளருணைத் தேவ சிகாமணிசெய்
காரியமே லாகியசற் காரியமே - யோரில்
விருத்தி பரிணதி விவர்த்தாரம் பத்திற்
பருத்திகலை பாறயிரொப் பாம். (13)

கலித்துறை.

பாமாலைத் தேவ சிகாமணி வாழும் பதியருணைத்
தூமாலை வெள்ளரு வித்தொங்கல் வாய்க்கண்ட
சோலையிற்போய்த்
தேமா மரமென்றுவெவ்வேறு கண்டவர் செய்தியைப
லாமாக மத்திற் குணகுணி வாதமென் [போ
ருவதுவே. (14)

அகவல்.

ஆவது மழிவது மாக்குதற் கிடமாந்
தாவில் காரண தத்துவங் கடந்து
மும்முத் திரையுறு முத்தத் துவங்களி
னம்முத் திரைதிறந் தறிவ தாகியும்
விசொளி பரந்து வியாபக மாய்நிறைந்
திசர்க ணயன கோசரங் கடந்து
மேழைய ரழைப்பினு மெதிர்மொழி கொடுத்தரு
ளருணா சலம்போற் கருணா லயநிதி
சிருணாசலத் தேவ சிகாமணி

யியற் றுதற் கருத்தா வென்ப தாகலி
னையர்ப்பருஞ் சத்திக ளாங்கர ணத்தா
லிறி லைந்தொழி லேவுங் கருத்தாத்
தூல மானவைந் தொழிலவா யோக்கியச்
சூக்கும மானவைந் தொழிலின் வழாத
விந்துவை நீங்கா விலய முத்தியும்
விந்துவை நீங்கிய விலயவி யத்தியும்
ஆந்தொழில் சாந்தி யாதிநாற் கலையினுஞ்
சாந்தி யதீதத் தனிக்கலை தனிலு
மிக்கலை யைந்தா வியல்பரை யாதியிற்
றக்க சிவமுதற் சாதாக் கியங்களு
மீசான முதியைந் தெழின்மூர்த் திகளுஞ்
சேர்ந்த சலப்பின்மந் திரங்க ளைந்து
மீசானி யாதியைந் தியல்சத் திகளுமென்
றளவில்சத் திகளிவ் வாறுண் டாக
மூர்த்திக ளைந்து முடியைந் தாக
வைந்துசா தாக்கிய வைம்முக மாகப்
பிரம மைந்துந் திருமேனி யாக
அனுசதா சிவரி சானரா தியர்கள்
பஞ்சவன் னத்துறும் பாவனை யதனை
லிந்திர சிலைபோ லாந்திரு மேனியன்
மறைப்பாற் கோர்பி வடிவென லன்றி
நிறத்தி னுறு நிகழ்பரஞ் சோதி
யிலக்குறு மிலய போகநெய் திரண்டென
வலப்பி லாத வொருதனு மூர்த்தி
மதுவை யுட்டிப்பின் வல்வினை நீர்க்கும்
பண்டிதர் போலருள் கொண்ட சங்கற்பன்
சிமான வைந்தவ தேசியென் றுரைக்குஞ்

சாமான்ய சைவர் சாராக் கடவுள்
இலகிய சுத்த வித்தியா புவனங்
குலவிய சத்த கோடிமந் திரத்து
ளியல்வச் சிராதிய ரிந்திரா தியர்க
ளுயர்நந் தியாதிய ருள்ளுறச் சூழ்ந்தே
யைந்து நான்கு மூன்று யெதிரா
யமர்ந்த மூவகை யாவர ணத்து
ளீசுரத் தினிலனந் தேசரா தியர்கு
மாசி லாத்துவி தாவர ணத்துட்
டங்குசா தாக்கியந் தன்னிற் பிரம
மங்க முதலா வரணஞ் சூழத்
திருமுடி யைந்துந் திருமுக மைந்து
மருள்புரி யிதயமு மங்க மாகக்
கண்களுமு வைந்தொளிர் கன்ன நாசி
யொண்களி வாய்கள்பத் துயர்தோள் கைவிர
லுரந்த னம்வயி றுந்தியூ ருச்சா
னுசங்கந் தாள்பிரத் தியங்க மாக
வெண்மை பொன்மை கருமை செம்மையென்
றெண்மை நிறங்களு முள்ளசின் னங்களு
மாயுதா திகளுஞ் சாங்க மாக
வுடையா பரணுதி யுபாங்க மாக
நவசத் திகளு நலங்கொள்முப் பானெண்
சிவசத் திகளுஞ் சிறந்துட னிருப்பப்
பொருவிலெண் சத்திகள் புகழாய்ப் பொலிய
வைந்து நீளமு மாறுன் னதமுஞ்
சிறுக ளுன்குஞ் சிவப்போ ரேழுங்
கூர்நேர்மை யைந்துங் குழிவு மூன்று
மகல மிரண்டு மாயழ குடனே

யண்ண லருள்வடி வான மேனியி
லெண்ணான் கென்று மிலக்கண மிலங்க
விறிலா துயர்ந்த விருதய முதலா
மாறுமந் திரங்க ளடங்கலும் புரக்கத்
தந்திரந் திகழ்சத் தியாதிசத் தியந்த
மந்திர சிங்கா சனந்துறை வள்ளல்
தத்துவ மூர்த்தி தனிப்பிர பாவமென்
றுத்தம மாக வுயர்திரு வுருவ
னரிபிர மாதியர்க் கரிய ராகிய
யோகா யோகிச் சுரர்க்குஞ் * சாமி
மோகநித் திரையின் முயன்றோர்த் தொடாம
லெண்கையி லெடுத்த விரெண் கோலால்
விழுப்பந் தோன்ற வெழுப்புந் தேசிகன்
ஞானஞா திருவென் றுனதே யல்லா
லேனை வடிவென் றிலாத சதாசிவன்
சுத்த மாயைத் துறையைக் கலக்கிச்
சத்த மருத்தந் தந்தரு ளீசன்
மன்னர் பாரமு மந்திரி தாங்கலி
னின்ன வாறுள விசனு மிவ்வழி
நின்ன தாக நிகழ்த்துத லின்றேல்
மலமா யாதியில் மறைந்தோ ரவத்தையுஞ்
செறிவுறு தன்னையுஞ் சிவனையு
மறிவுறு மறிவெப் படியா வாரே. (15)

* சாமி—பிராகிருதம் என்பர் நச்சினார்க்கினியர். அது சிந்தாமணி யுரையிற் காண்க.

விருத்தம்.

ஆவாரா மலமாணு லணுவிபு வாமோ வாகாதே
யோவாதறிவை மறைத்தா லறிவற்றுயி ரென்பது
முண்டோ
தாவாஞா திருஞானம் ஞெத்தி தணந்திட லாகாதே
தேவா வருணைத் தேவசிகாமணி தேசிக தேர்
வோர்க்கே.

வெண்பா.

கேவலான் மாவைமலங் கிட்டியதன் றேயருணைத்
தேவ சிகாமணியைத் தீண்டியதோ - பாவங்
கடிதன்றே செம்பு களிம்புற்ற தல்லாற்
படிகங் கொளுமோ பழுது. (17)

கலித்துறை.

பழுதான கங்குலிற் பாயிருள் சீக்கும் பருதிவரும்
பொழுதா ரிருள்புல ராம லிராது புகழருணைத்
தொழுதாரைத் தேவ சிகாமணிச் சூரியன் றோன்றமல
முழுதா ரிருள்புலர்ந் தம்போ ருகக்கண் முகிழ்
விள்ளுமே. (18)

அகவல்.

விள்ளருங் கருணை வெள்ள மான
வுண்ணா முலைப்பெண் ணுமையொடு வதிந்து
மாறா துதவும் வசந்தத் தியாகர்
நினைவருள் புழுகு நெய்ப்பிர தாபர்
வடவா முகமும் வாரியின் மறையக்
காலாக் கினியுங் கதிரொளி மழுங்கப்
பகலோன் வடிவும் பகன்மதி யாகத்

தருபே ரொளிவிளங் கருணாச லேச
தேவ சிகாமணித் தேவ தேவே
சிவாகமத் துள்ளே தெரிவ தல்லா
லவாகமச் சமயிக ளறியாத தாகிக்
கேவலம் பஞ்சத் திலேசத் தவிச்சை
போல்வி வேகத்திற் போகா தாகித்
திகழிதஞ் சேராச் செம்பிற் களிம்புங்
கதகஞ் சேர்ந்த கலங்கலு மணிசே
ருடலிற் பொல்லா விடமும் போலப்
பயில்சிவ சத்தி பதிந்த காலத்
துயிரொழி யாதுதா னொழிவ தாகிக்
கருவியிற் றீர்ந்திடு கட்பட லம்போற்
கிரியா தீக்கையிற் கிடைப்ப தல்லா
லொருஞா னத்து மொழியாத தாகித்
தூமங் காட்டுஞ் சுடர்போல் வாஞ்சைசெய்
போகங் காட்டப் பொலிவ தாகி
யொருசிவன் போல வுயர்சுதந் தரனைப்
பரதந் திரியம் படுத்துவ தாகி
யாசறு சகச னாகிய வணுவைப்
பாசிய னாக்கும் பசுத்துவ மாகிப்
பிணியோன் றில்லாப் பேரறி வோனை
யணுவென் றுக்கு மஞ்சன மாகி
யொழிவி லாதுயர்ந் தோங்குசிற் சத்தி
விழிதரும் போதி லொழிவ தாகித்
தானென் றுகிச் சத்திகள் பலவா
யான்மாத் தோறு மாவ தாகிப்

பலவகைப் பட்ட * விருவகைச் சத்தி
யொருமல பதார்த்த மொழிப்பதோ வரிதே
தருவா கிசுவரி தான்கி ழரணியு
மிருவா கிசுரர் மேலர ணியுமா
யோம்பழ லுயிராப் போம்புகை மலமாய்
விறகனல் போல மெய்யறி வுதிப்ப
முறுகக் கடைந்த வுறுதி நன்றே
யைவகைப் புகையெனு மலோபா திநீங்க
விவ்வகை நீசெய் திடாவிடில்
மெய்வகை விறகனல் வெளிப்பட லருதே. (19)

விருத்தம்.

உறவொடு பகையை யொழித்தரு ளுருவா
யோங்கிய குரவனு மரசு
மறலியு மெனவே மன்னுயிர்ப் பாவ மாற்றுதற்
கமைத்தமூ வரினுந்
திறலுறு தேவ சிகாமணி யாலே தீதெலாந்
தீர்ந்திடி லினிதா
மறமுடை யரசன் செயலிலுங் கொடிதா
மளப்பரு நிரயவே தனையே. (20)

வெண்பா.

வேதனைசே ருள்ளந்தான் மெய்யறியு மோவருணைச்
சேதனமாந் தேவ சிகாமணியைப் - போதநிறை
மாத்தவர்தம் பாசமெலா மாய்ந்தசம னுந்தத்தே
சாத்தமனங் காட்சி தரும். (21)

---

* இருவகைச்சத்தி—ஆவாரசத்தி - அதோதியாமிகா சத்தி.

கலித்துறை.

தருமாயை யென்னு மிரண்டுமிப் பாசத் தளையுமுறு
கருமாயை வாழ்க்கை யனுவவை தானுங் கருணைபுரி
திருமா நிதியரு ளாசலத் தேவ சிகாமணியு
மருமா வியாபக நித்திய மாமைந்த னாதிகளே. (22)

அகவல்

அநாதி பராளந் தப்பெருஞ் சோதியை
யாதியோ டந்தஞ் சோதனை குறித்தலின்
மாய வராகங் காயஞ் சேந்து
குமரன் வேலாற் சமர்செயு முன்னும்
புண்படச் சிவந்த பண்பு காட்ட
வந்த முருதே னொந்தவெள் ளன்னமு
மாவேள் கொடிச்செஞ் சேவ லாகச்
செஞ்சுடர் விரிக்குந் திருவரு ளாசலத்
தேவ சிகாமணிச் சிமா னருளிற்
பாரந் தாங்கிய சிரளந் தேசர்
சுவதாய்ப் போகந் துய்ப்பித் திடுதலின்
மோகினி யெனும்பே ராகிய மாயையிற்
பாய பானையிற் பூவிரி தோன்றப்
பூவிரி பழுக்கா யாவிரி வதுபோல்
மிச்சிர மசுத்த மெனவிரி தத்துவஞ்
சாதா ரணமு மசாதா ரணமுஞ்
சாதா ரணாசா தாரண வடிவும்
படைத்தினி தளிக்கும் பான்மைத் திதியி
லசாதா ரணத்தினு ளாந்திரி பந்தி
பௌவன போகஞ் செவ்வித் தனுகர
வருமிர நட்ட வாகிய தேசியு

மருவப் பிராப்த வாகிய தேகியுந்
தூலதே கங்கொடு துய்க்கச் சமைந்திட
நற்றுவி பந்திவிஞ் ஞான கலரா
யற்று மலத்தொ டதித்த் திருப்பச்
சுவாபகா லத்துமுன் சொல்லிய மூவகை
யணைவரும் பிராள யாகல ராகத்
தோற்ற மொடுக்கந் தோறுஞ் சுழன்று
மாயா பந்தத் தாயான் மாக்கள்
உறுதுயர் யாவையு மொழியுங் காலம்
பாச வாலிலை பழுத்தபக் குவமாய்ச்
சொல்லுஞ் சொருபசத் துவபரி ணதியு
மாயையால் விதையில் வளர்ந்தென வெழுந்து
தோன்றிய சொருபாந் தரபரி ணதியுங்
கன்ம நாசமென் றிம்மூ வகையின்
பரிபா கமனுக் கிரக மாகவும்
பாக மூருவிப் பான்மூ வகைக்கு
மனுக்கிர கந்திரோ தான மாகவு
மரணறிந் தியற்றுவ தல்லா
லரிதரி தறிவ தான்மா திகளே. (23)

விருத்தம்.

திகழுமன மிந்திரிய மொன்றைச் செலுத்திடத் தேரினிரு விகற்பவித்தே சேர்ந்தறிய ராகம் விகற்பமா யிச்சையைச் செய்யமன மையஞ்செய்தே, நிகழகங் காரமதி யேவவொன் றறிவலென நிற்பவொன் றுறுபதார்த்த, நிச்சயஞ் செய்யமுக் குணமீன்ற புத்தியி னிறைந்தசுக துக்கமோகம், புகல்நியதி நியமிக்க வோர்கால மேவப் புகழ்கலை புசிப்பதாக்கப்

புத்தியிற் போகம் புசிக்கவுன் முகனுய்ப் புகுந்தபுரு
டன்றனக்கோர், மகனெனுஞ் சிவனிவ் வாறுமோ
கினியான் மயங்கிப் புசிக்க வூட்டி,வருதுயி லுறச்செயு
மருணைவாழ் தெய்வ சிகாமணி மருதடுத்தே. (24)

வெண்பா.

அடுத்தருணைத் தேவ சிகாமணியா லன்றோ
வடுத்தனைநீத் தங்கனகம் வாய்ந்தேன்-றொடுத்த
வலகுடைய தங்கமினி யாகேனப் பாலு
மிலகுடைய தங்கமா வேன். (25)

கலித்துறை.

வேனிலுந் தண்ணெனத் தென்றலு லாம்பொழின் [மேகமென்னத்
தேனின் மழைபெய் யருணைநந் தேவ சிகாமணிகண்
மீனிலமேனி யனகனஞ் சிந்தனை வேறல்லவே
யினிலந் தேடுந் துளியின மாகும் மியாவர்க்குமே.

அகவல்.

யாவருங் காண வேபசுந் தோகை
காவின்மே லிருந்து கண்ணொளி பரப்பத்
தாதையே துதைந்து பேதைவண் டூதுங்
கூதள மலர்வெண் கோடென விசைப்ப
முத்தள வருவி மத்தள முழங்கக்
கின்னர மிதுனங்க ளின்னிசை பாட
வாயு வாய்துனை வேய்தா னிசைப்பக்
குருவரு ணசலக் கொழுஞ்சுட ராடுந்
திருவரு ணசலத் தேவ சிகாமணி
திருமல வாழ்க்கை நீதோய்ந் தறியாக்

கருமல வாழ்க்கையெங் காதை கேட்டி
யுலக மேழு மலேகம தாக
விழுத்தகு மேரு வெழுத்தா ணியாகப்
பலநா ளெதினுந் தொலையாப் பாரத
மாயினுஞ் சிலசில தியினுங் கொடியன
மாயா தேகத் தாயமுக் குணஞ்செய்
புத்தி யென்றது பத்தியொன் றறியா
தெட்டுக் கோணல் பட்ட சக்கரத்
தாறுநூற் றிரா ருய பாவச்
சூரு வளியிற் சுழலுந் தோறுந்
தேடிய கன்மங் கோடி கோடி
சிரண வுலகிற் காரண மின்மையி
லாதி யோவன் றனுதி பந்த
மூலந்தபின் மாயையி லுறைந்தபக் குவமாய்ப்
புலர்ந்தபி னணுக்கள் புந்தியின் முளைத்து
மனவாக் காயத் தனுதினம் வளர்ந்தே
யக்கினிட் டோம மந்தணர் தாந்தஞ்
செய்தலிற் கன்மமென் றெய்துபெயர்த் தாகிச்
சஞ்சித முதலா விஞ்சு மூன்றி
லார்த்த மாய்வந் தடைந்த கன்மஞ்
சாதி யாயுப் போக மென்றுஞ்
சனகந் தாரகம் போக்கிய மென்று
மதிட்டந் திட்ட மனியத மென்றுஞ்
செம்பொ னிரும்பிற் செய்விலங் கிரண்டெனத்
தன்மா தன்ம மென்னுமீ ருருவாய்த்
துக்க மோகஞ் சுகமெனப் பலவாய்ப்
புக்குழிப் புக்குப் பொருந்து மாதலி
னிறந்திறந் துலகிற் பிறந்திடுந் தோறும்

பாபபி டைப்பெரும் பாதகஞ் செய்தலி
னரக நூற்று நாற்பதிற் பயின்றபின்
விலங்குரு வாயித் தலந்தனிற் பிறந்துந்
தரும நியாயந் தப்பிய திமைக்
கருமந் தன்னு லுருமி னுயும்
வாக்கு நான்கால் வருபவந் தொடரப்
பறவை யாகும் பிறவி யாயு
நாத்திகம் பேசலி னயனிலாப் பாலையிற்
பூத்துப் பயன்படாப் புன்மர மாயும்
பவமுறப் பிறர்க்குப் பயஞ்செய் திடலாற்
சருவமுண் டுழலுஞ் சாதி யாயும்
வெய்துறு பயஞ்செய்து மெய்யனு சாரஞ்
செய்துநாய் முதலாந் திப்பிறப் பெய்தியுந்
தழைந்திடுங் கிரக தானப காரா
மிழைத்தலிற் பாதந் திரிய மெய்தியுங்
கருணையோன் றில்லாக் கருத்தொன் றுடைமையி
னிருணலி பயக்கு மிழிபிறப் பேய்ந்து
நிறைகுண மின்மையி னேசத் தாற்றிரு
முறைகரந் திடுதலின் மூங்கை யாயுந்
துன்னெறி யாலுயிர்த் தொகைக்கிடர் செய்தலி
னன்னெறிக் கண்செவி நாசி குறைந்து
மலிவுறு கொலையா லற்பாயு வாயு
மூலவாக் கால முழந்தன னெந்தாய்
வாமுறு நல்லுப வாசய மத்தாற்
பாதகண் டத்திப் பான்மையிற் பிறந்தேன்
பவமுறு பவ்வப் படுதிரைத் துயருழந்
தவமுறு மழுவத் தழுந்தி னேனைப்
புடாப பதார்த்தமென் றேர்புணா யேற்றி

ஞானபா தத்தி னற்கரை யேற்றினே
பிறவா வாழ்க்கையும் பெற்றே
னறவா பேறினி யாவரு வனவே. (27)

விருத்தம்

யாவரும் பரவு மேன்மை யெய்துமிவ் வருணை தானே
தேவரும் புகழ்செய் தேவ சிகாமணி சேரு மூதூர்
தாவரு மகங்கா ராண்டத் தலேச்சுரத் தனிப்பேர் மன்னு
நிவரு நினைக்க முத்தி நிகழ்மனோ புவன மாமே. (28)

வெண்பா.

மேவரிய வெண்மதியின் மேலேநன் னூலினுறத்
தேவ சிகாமணியைச் சேர்த்தணிந்தா - லோவாத
நல்லலங் காரமா நள்ளிர வெலாம்பகலா
மல்லலங் காரவரி தாம். (29)

கலித்துறை.

அரியா ருறையு மருணையு மென்னித யாம்புயமும்
பிரியா துறைதரு தேவ சிகாமணி பேதைமைபோற்
றெரியா தயர்த்த வடியார் தினந்தினஞ் செய்தபிழை
பரியா தறுத்துச் சுடுவதெல் லாமவர் பாசத்தையே. (30)

அகவல்.

பாசத் தளையாற் பலபகுப் பாதலிற்
காரா வினத்தினு ளோரா வேருய்
விசாதியிற் பிரிந்து சாதியி னீங்கிச்
சுகத பேதச் சொரூபநீங் காமையி
னன்னது போலு மன்னுயி ரொன்றே
யூக மனுபவத் தோரிரண் டாகி

மூவகைச் சத்தியாய் நால்வகைக் குலமாய்ப்
பஞ்சவன் னங்கொளும் படிகம் போல
வாறத் துவாவின் வேறுவே றுருவா
யெழுவகைத் தோற்றத் தெண்வகை மலத்தொடு
நவமுறு கன்மத் தவமுற லொழித்துத்
தசகா ரியத்தின் வசமுற விருத்தி
வரமும் போகமு மருட்கையு முடைய
மேல்கீழ் நடுவென விளங்கவத் தையினி
லிருதை யாதிசாக் கிராதியைந் தின்கண்
டொகுபிர மாதியிற் றுரியசுத்த வித்தையிற்
றிகழைந் தெழுத்தொடு சிவமந் திரஞ்சொல
விவ்வகை யின்றிச் செய்வகை மயங்கிப்
புருவ நடுமுதற் புகல்கீ ழவத்தையி
லிருவகை யிந்தியம் விடய மிருபது
முட்கர ணங்களைந் தொடுகால் பத்து
மென்றையே முறல்சாக் கிரமென் றுக
வாயு வசனாதி நால்வாயி லிருபது
மனாதி புருடன் வகையைந் துடனே
யையைந் துறல்சொப் பனமென் றுகச்
செந்நெறிப் பிராணனுஞ் சித்தமும் புருடனுஞ்
சொன்ன மூன்றுறல் சுழுத்தி யாகப்
புருடன் பிராணனோர் துரிய மாகப்
புருடனி லிங்கம் புகச்சீ விப்பது
தெருளா று துரியா தீத மாக
வைவகை யாகு மவத்தை நீங்கிப்
பிரத்தியா காரா திபெறுசாக் ராதியி
லுன்ம னந்தமட் டுயர்தா னத்துச்
சாக்கிர சாக்கிரந் தான்முத லாகச்

சாக்கிர துரியந் தன்னின் மீதே
கால பரமதி தம்பர தரிசனம்
விசுவக் கிராச முபசாந் தஞ்சிவ
தெரிசனஞ் சாயுச் சியம்பன் னென்று
மைமூன் றுந் துரி யாதி தத்துட்
சிவபோ கப்பெருஞ் சிவசா திருச்சியச்
சிவசா யுச்சியச் சிவானந் தந்தனைச்
சிறியேற் குதவும் பெருமை யாள
தகாத களங்கமுந் தமரு மில்லா
மகாமணி தேவ சிகாமணிச் சோதி
மருணு சஞ்செயு மருணு சலேச
விவ்வகை யின்றிச் செய்வகை யில்லாப்
பாலர்வா லீசர் மாதர்போ கியரென்
றென்போ லியர்க்கு மிருங்கதி வேண்டிச்
சில*நிர்ப் பீச திக்கையுஞ் செய்தி
பெரியோர் பெறும்பே றெளியோரு மெய்தலி
னின்பெருங் கருணை நீர்மைகண்
டன்பி லேனின் னடிபணிந் தேனே. (31)

விருத்தம்

பணிந்தி டுஞ்சிவ பத்தர் பாலுறு பத்தி யும்பவ பீதியு
மணிந்த சின்னமு மெய்ய டக்கமு மாக மத்தி லமைத்
[தவா
துணிந்த செய்கையு முத்தி யோடு தொடர்ச்சி
[யும்பல சோணவாய்த்
திணிந்து தேவசி காம ணிக்குறு செய்தி யைப்புகல்
[சின்னமே (32

---

* நிர்ப்பீசம்: ஆசார மில்லாதது என்றுர் மறைஞான தேசிகர்

வெண்பா

சின்னமா மேசஞ் சிதந்தகித்த வித்தெனலா
யன்னதிக் காங்கத்தா காமியம்போந்-தென்னருணைச்
சித்தேகத் தேவ சிகாமணிசெய் யாரத்த
மத்தேகத் தோடறுமெல் லாம்· (33)

கலித்துறை.

எல்லாருந் திபங் கொழுந்துசெவ் வான மிளந்தளிர்மின்
மல்லார் மலர்நெய் வழிதேன் புகைமென் மகரந்தமாய்ச்
சொல்லருந் தேவ சிகாமணி சோணைத் துருமமொன்று
பல்லார் விழிவண்டு சூழ்தர முத்திப் பலந்தருமே. (34)

அகவல்

தருகீழ் முத்தித் தலைமை சான்ற
பிரகிரு தியில்வரு புவனம் பேசிற்
சேர்பெரும் பூதஞ் சிறந்ததன் மாத்திரை
வாரிந் திரிய மனமகங் கார
மதிகுண மான்மே லிருபுவ னத்துப்
பிசாசுட னிராக்கதர் பேரா வியக்கர்
யாழோ ரிந்திரன் சோமர் பிரசாபதி
யிவ்வெழு பேர்க்கு மொவ்வொன் ருக
வேறிய சித்தியு மிவர்கள் மேலே
இசைமுக னெண்ணெண் சித்தியும் படைப்பப்
பிரத்திய ரூபப் பிராகிரு தர்களாய்த்
தத்துவம் பத்தினுஞ் சார் தரு மணுக்களை
யான்ம வாதிய ராக நீக்கிப்
பவமில் புருடோ பரிச்சிவ வாதரிற்
சத்தினி பாதத் தன்மை நோக்கிச்
சிவசத் திகளாற் றிக்கைசெய் தருளி

யுருமலக் குரம்பையை நிருமல மாக்கி
யிருசெவி யிடத்தி னிந்திரா தியரு
மருவுறு துவக்கின் மாதரி தானு
மணிவிழிக் கிரவியும் வாயிடை வருணனுங்
கனிதரு நாசியிற் காசினி தானும்
வாக்கி லங்கியு மேற்கையிந் திரனும்
பாத மாலும் பாயுமித் திரனு
முபத்தம் விதியு மோர்மன மதியு
முறைவ தாகி நிறைவது மன்றிச்
சிந்தனை செய்சிவ மந்திர மாக்கி
யைவகை யுயிரையு மெய்வகை நீக்கிப்
புத்திமுத் தியுமேல் வியத்தியு நோக்கி
மாலயன் பேறும் வறுமையின் வறிதா
வும்பர் வாழ்வுங் கும்பிவாழ் வாக
வராகத் தின்கி ழானமுத் திகளும்
வாய்த்த கானிற் பேய்த்தே ராக
வளைவில் ஞானத் தளவில்பூ ரணமா
மிருவகை யிருமூன் றின்ப வியோம
வொருபெருஞ் செல்வத் திருவர சாக்கிய
கருணா சலத்திரு வருணாச லேச
மெய்வசி காமணித் தெய்வ சிகாமணி
தாண சாரமெய்ஞ் ஞான சாரிய
காக்கையைத் தன்னிற மாக்குமே ருப்போ
லென்போ லியரையு நின்போ லாக்கலிற்
றெழுற்குறும் விசிட்டாத் துவிதா தியர்போ
லழுக்கா றுருநின் னருட்பெரு வாரி
வாழி வாழி வாழி
பாழிமா நிலத்துயிர் பலம்பெறப் பலவே. (35)

விருத்தம்

பலந்த ரும்பேரி திகம்ப ரந்தன்னிற் பரத்தின்மேற் பரமான, புலந்த ருந்தரு மிருவகைப் போகமும் போகத்தின் பொலிவான, நலந்த குந்தரு மிருவகை முத்தியு நல்லரு ணையின்மேவு, வலந்த ரும்புகழ்த் தேவ சிகாமணி வான்மணி தராதோன்றே. (36)

பஃறொடைவெண்பா

ஒன்றிய சந்தசுதா ளோர்கற்பங் கையாக
வென்றி வியாகரண மேயா னனமாக வன்றியுஞ்
சோதிடங் கண்ணு நிருத்தஞ் செவியாக
நன்றுடைய சிட்சையே நாசி வடிவாக
நின்றவா றங்கத்தி னிள்வேத மாமேனி
கன்றரிய வந்தக் கரணஞ் சிவாகமமாச்
சென்றருணைத் தேவசி காமணிச்சி வன்செலுத்தி
லன்றிவாரா துய்வதரு ளால். (37)

கலித்துறை

அருளுண்டெனிலுண்டறங்களெல்லாமவ்வருளுநல்ல
பொருளுண்டெனிலுண்டுபோகியர்க்கேயிவர்போகமல
விருளுண்டெனிலுண்டிங்கெல்லாம்வராமலிருத்து
[மொரு
தெருளுண் டெனிலுண்டு தேவ சிகாமணிச்
சிற்குருவே. (38)

அகவல்

குருவேறு வேறுய்க் குலவான்ம வாதந்
திருவருள் படைத்த சிவவாத மென்றிங்
கிருவகை வாதத் தொருமுதல் வாதத்து

வாகியம் வைதிக மாகிய விரண்டினி
லொருகுரு வுரைத்த வுலகா யதமு
மருகந் தரில்வழங் கார்கத நூலும்
பரமெனுஞ் சுகத பௌத்த நூலுமென்
றுனா வாகிய ஞான மூன்று
மெய்திய விவேக வைதிக மார்க்கத்
தங்க முபாங்க முபவேத மாகிய
வங்கி யகலா வங்கவே தம்புகல்
வாய்த்த லௌகிகம் வைதிக சாத்திரம்
ஆத்தியான் மிகமதி மார்க்கமந் திரமென்
றைவகை யாகிய மெய்வகை நூல்களி
லிட்ட மாகிய திட்ட பலஞ்செயும்
வைத்தியந் தண்டம் வழங்குலௌ கிகமுந்
திட்டா திட்டங் கிட்டிய பலங்கள்
பிரியா வேதக் கிரியா காண்டத்து
மீமாஞ்சை நியாய மிகுவை சேடிக
மென்னும் வைதிக மன்னு ஞானமு
மதிட்ட பலமெனு மான்மஞா னத்து
வேதாந்த சாங்கிய மிகுபாதஞ் சலமென்
றளவி லாத்தி யான்மிக ஞானமுந்
தேர்ந்துற வல்ல சிவவா தத்திற்
சார்ந்துறு சாமா னியசை வத்துட்
பாசு பதங்கா பாலமா விரதமற்
றுசி லாத வதிமார்க்க ஞானமு
மருளுஞ் சதாசிவ னதோவத் திரமாந்
தற்புரு டாதியி னிற்பிரே ரிக்கு
மனுதற் புருட ராதியோர் மொழிந்த
வதச்சு ரோதசென் றுயமந் திரத்துட்

காருட மேதக் கிணம்வாமம் பூதமென்
றிரு சாத்திர மெனலா மிவற்றுட்
புருடமே பொருளாய்ப் புகன்றுமந் திரமருந்
துரைசெய் காருட மென்றுள்ள ஞானமு
மகாரமே பிரம மாமப் பிரமமும்
யோகத் துறுமென் றேர்சத் துருசெய
மந்திரஞ் சொல்ல வல்லதக் கிணமும்
வாமமே பொருளென வழுத்தி வசியாதி
மாயந் திரம்புகல் வாமதந் திரமுஞ்
சத்தியோ சாதந் தானே பொருளென
வாய்க்கும்பூ தாதியை மந்திர மருந்தாற்
போக்குதல் புகன்ற பூததந் திரமு
மென்றஞா னமுமிங் கொன்றிமே லுயர்ந்து
முன்னம் பராவச் சொன்ன சதாசிவ
ரந்தமி லருளான் முந்திய படைப்பிற்
சத்த பேதத் தன்மையிற் சமைந்தே
யூர்த்துவ முகந்தனில் வாய்த்தினி தான
சிவசம வேதச் சின்மய மொன்றே
சிவபே தங்களிற் செப்புமி ரைந்தா
யுருத்திர பேதத் தோர்பதி னெட்டாய்க்
காமிகம் யோகசஞ் சிந்தியங் காரண
மசிதந் தீப்த மரிய சூக்கும
மப்பாற் சகச்சிர மஞ்சுமா னேடு
சுப்பிர பேதம் விசயநிச் சுவாச
மருட்சுவா யம்புவ மனலம் வீரம்
வாமிகு ரௌரவ மகுடம் விமலஞ்
சந்திர ஞானந் தன்னொடு விம்பம்
புரோற்கி தத்தொடு புகலும் லளிதஞ்

சித்த தந்திரந் திகழ்சந் தானம்
பகர்சரு வோத்தம் பார மேசுரங்
கிரணம்வா துளமெனக் கிளக்குநா லேழு
போதவா கமங்கள் பாதநால் வகையாய்ச்
சுத்த மாயையில் வைத்த வாறே
யனந்தர்சி கண்ட ருருளுமை கணபதி
குமர னரியயன் குலிசன் வானோர்
முனிவர் வழிவழி யினிதுணர்ந் தன்பின்
முனிவர் வழியிம் முதுநிலத் துதிப்ப
வந்தரு னமுமென் றிந்தரு னங்க
ளவனி முதலா வருசிரு தாந்தத்
தேற்றிய விளக்கு மேற்பரு தியுமாய்ச்
செப்பிய சுத்த சிவமே லாதலிற்
றிருவரு ளுசலத் தேவ சிகாமணி
குருவரு ளுசலக் குளிர்நெடுஞ் சாரலிற்
கார்த்திகை மலர்ந்த காந்தட் பரப்புஞ்
சீர்த்திகொள் சிகரத் தீபமும் போலுங்
குன்றின் மேலிட்ட கொழுஞ்சுடர்
துன்றிய சுந்தரத் துவிதநங் குருவே (39)

விருத்தம்

குருமணி யருணை வாழுங் குருமணி குணமே யான
திருமணி தேவ தேவ சிகாமணி செம்பொற் றுளே
தருமணி வனசம் போலத் தான்குவி யாதுசான்றோர்
மருமணி மதியுள் ளேயு மலர்தரு வனசப் பூவே. (40)

வெண்பா

சீர்வாழி தெய்வ சிகாமணி சீருணை
யூர்வாழி வாழி யுலகெல்லாங் - கார்வாழி
சித்தமிழ்த ஞானசிவ வாகமம் வாழிசெழு
முத்தமிழும் வாழி முறை.

நான்மணிமாலை முற்றியது.

ஆக்கியோன் பெயர்

அணிமாலை காலை யணிமாலை நீர்கொண் டயனுடனே
பணிமாலை யாளும் பரனரு ணேசன் பதத்தைநித்த
மெணிமாலை நீக்கிய தேவ சிகாமணிக் கேதமிழ்ஞான
மணிமாலை நாலை வனைந்தான் குமார மகாமுனியே.

கலைமகள் பிரஸ், காரைக்குடி.